**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற, செவித்திறன் குறைபாடுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டம் – 2015–2016ஆம் நிதியாண்டு – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1D) எண்.11** **நாள்: 23.06.2015**

**மன்மத–ஆனி 8, திருவள்ளுவர் ஆண்டு, 2046**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (1D) எண்.15, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 01.07.2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2685/சிபதி/2015, நாள் 26.05.2015.

------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–2015 ஆம் நிதியாண்டில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற, செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்க, ரூ.3.85 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மார்ச் / ஏப்ரல், 2015ல் நடைபெற்ற 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற, செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்க ஏதுவாக, 2015–16 ஆம் நிதியாண்டில் ரூ.3,55,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று, மார்ச்/ஏப்ரல், 2015ல் நடைபெற்ற 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற, செவித்திறன் குறையுடைய மற்றும் வாய்பேச இயலாத மாணவ / மாணவியருக்கு ரொக்கப் பரிசு வழங்கும் திட்டத்தினை, 2015–16 ஆம் நிதியாண்டில் செயல்படுத்த திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கு கீழ்க்கண்ட விவரப்படி ரூ.3,55,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | வகுப்பு மற்றும் பொதுத் தேர்வில் பெற்ற இடம் | தொகை | மொத்த செலவினம் | |
|---|---|---|---|---|
| I | 10 ஆம் வகுப்பு | | | |
| 1. | முதல் இடம் | ரூ.25,000/– x 2 நபர் (பார்வையற்றோர்–1 மற்றும் காதுகேளாதோர்–1) | ரூ.50,000/– | |

[த.பி.பா]

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | இரண்டாம் இடம் | ரூ.20,000/– x 3 நபர் (பார்வையற்றோர்–1 மற்றும் காதுகேளாதோர்–2) | ரூ.60,000/– | |
| 3. | மூன்றாம் இடம் | ரூ.15,000/– x 3 நபர் (பார்வையற்றோர்–1 மற்றும் காதுகேளாதோர்–2) | ரூ.45,000/– | **ரூ.1,55,000/–** |
| **II** | **12 ஆம் வகுப்பு** | | | |
| 1. | முதல் இடம் | ரூ.50,000/– x 2 நபர் (பார்வையற்றோர்–1 மற்றும் காதுகேளாதோர்–1) | ரூ.1,00,000/– | |
| 2. | இரண்டாம் இடம் | ரூ.30,000/– x 2 நபர் (பார்வையற்றோர்–1 மற்றும் காதுகேளாதோர்–1) | ரூ.60,000/– | |
| 3. | மூன்றாம் இடம் | ரூ.20,000/– x 2 நபர் (பார்வையற்றோர்–1 மற்றும் காதுகேளாதோர்–1) | ரூ.40,000/– | **ரூ.2,00,000/–** |
| | | | **மொத்தம்** | **ரூ.3,55,000/–** |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | |
|---|---|
| **2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூகநலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AA-பார்வையற்றோர் பள்ளி – 59–பரிசுகளும், வெகுமதிகளும் (து.தொ.கு.2235–02–101–AA-5904).** | **ரூ.1,60,000/–** |
| **2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூகநலன் – 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – I–திட்டத்தில் சேராதது – AR-காது கேளாதோர் பள்ளிகள் – 59–பரிசுகளும், வெகுமதிகளும் (து.தொ.கு.2235–02–101–AR-5900).** | **ரூ.1,95,000/–** |

5. இவ்வாணை, நிதித் துறையின் இசைவுடன் அலுவல் சார்பற்ற எண்.33721/நிதி(சந)/2015, நாள் 22.06.2015–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/18 (பெயரில்).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மூலமாக)

<u>நகல்</u>

மாண்புமிகு அமைச்சர் (சந(ம)சதி) அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வித் (ஜி.இ.1) துறை, சென்னை–9.
நிதித் (ச.ந.) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலர் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.